[மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்] [1975 ஏப்ரல் 7

பாலில் கலப்படம் செய்வதை அந்தப் பாலிதீன் பைகளில் விற்பதால் தடுக்கப்படுகிறது. ஏற்கனவே கண்ணாடிப் புட்டி களில் வழங்கப்படுவதில் சிலயிடங்களில் சில பேர்கள் கலப்படம் செய்து விடுகிறார்கள் என்று கூறியதால் இந்த பாலிதீன் பைகள் மூலம் விற்பனை செய்வதற்கு இப்போது இம்மாதிரி சில இடங் களில் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மாதவரம் பால்பண்ணையிலிருந்து வழங்கப்பட்ட கடன்கள்

* 577 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மாதவரம் பால்பண்ணையின் மூலம் வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு?

(இ) அவற்றில் காலங்கடந்த கடன்கள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மாதவரம் பாற் பண்ணையில் உள்ள உரிமைதாரர்களுக்குக் கடன் வழங்க ரூ. 75,000 தொகைக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் ரூ. 30,000 1973-74-ல் ஆறு உரிமைதாரர்களுக்குத் தலா ரூ. 5,000 விதம் வழங்கப்பட்டது.

(இ) முந்தைய ஆண்டுகளில் உரிமைதாரர்களுக்கு வழங்கப் பட்ட கடன் ரூ. 20,330 தவணைக் காலம் கடந்து போய் இன்னும் வசூலிக்கப்படாமல் உள்ளது.

Conference of Rehabilitation Commissioners

* 578 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state:

(*a*) whether a conference of Rehabilitation Commissioners of Southern States and the Officers of the Central Departments of Rehabilitation was held at Hyderabad in June 1974;

(*b*) whether any representative of the State Government attended the Conference; and

(*c*) the details of the decision taken at the conference?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: (அ) ஆம்.

1975 ஏப்ரல் 7]

(இ) ஆம். அரசு வருவாய்த் துறை செயலாளர், வனத் துறைத் தலைவர், அகதிகள் புதுவாழ்வு இயக்குநர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(உ) ஹைதராபாத்தில் 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நடைபெற்ற தென் மாநிலங்கள் அகதிகள் புதுவாழ்வுத் துறைக் கமிஷனர்கள்/செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட குறிப்பின் நகல் ஒன்று சட்ட மன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: மண்டபம் போன்ற இடங்களில் பர்மா அகதிகள் ஆகட்டும் அல்லது கன்னியாகுமரியில் உள்ள சிலோன் அகதிகள் ஆகட்டும் ரப்பர் தோட்டங்களில் மிகக் குறைவான கூலியில் வேலை செய்யக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. பலவகைகளில் அந்த அகதிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உதவ திட்டம் தீட்டப் பட்டதா இந்த மாநாட்டில் ?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்—

ஸ்ரீஇலங்கா அகதிகளை மலைத்தோட்டங்கள், தொழில் தோட்டங்கள், நிலக்குடியேற்றத் திட்டங்கள் ஆகியவற்றில் அமர்த்துவது பற்றி ஆய்வு செய்தல்.

ரொக்க உதவித் தொகை கொடுப்பதன் மூலம் தனிப்பட்ட தொழில் அதிபர்களின் நிறுவனத்தில் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

அகதிகள் கூட்டுறவு நிதி வழங்கு வள வங்கிகளில் மேம்பாட்டு பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

வணிகக் கடன்கள், வீட்டு வசதி கடன்கள் ஆகியவற்றின் உச்சவரம்பை உயர்த்துதல்.

அரசுத் துறை நிறுவனங்களில் தொழில்களிலும், புதுவாழ்வுத் திட்டங்களிலும் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்.

இவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்துவருகிறோம். ஏதாவது குறைபாடுகள் இருந்தால் கட்டாயம் அதைக் கவனிக்கிறோம்.